தீக்கதிர் 21-12-2010 கோவை

# அம்பேத்கர் திரைப்படம் வெளியிட கோரிக்கை

கோவை, டிச.20-

அம்பேத்கர் திரைப் படத்தை கோவையில் வெளியிட வேண்டுமென, மாவட்ட ஆட்சியரிடம் ஆதித்தமிழர் பேரவையி னர் கோரிக்கை மனுக் கொடுத்தனர்.

இதுகுறித்து, அவ் வமைப்பின் மாவட்ட தலைவர் தி.செ.கோபால், மாவட்டச் செயலாளர் கரு மாணிக்கம் உள்ளிட் டோர் கொடுத்த மனுவில்: தேசிய திரைப்பட வளர்ச் சிக் கழகத்தின் மூலம் தயா ரிக்கப்பட்ட இப்படம் தமிழகத்தின் பல மாவட் டங்களில் வெளியாக வில்லை. கோவை மாவட் டத்தில் அம்பேத்கர் திரைப் படம் வெளியாக நடவ



டிக்கை எடுக்கவேண்டும்" இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

தினத்தந்தி கோவை 21-12-2010

# அம்பேத்கர் திரைப்படம்

கோவை, டிச.21- கோவை மாவட்ட ஆதித்தமிழர் பேரவை தலைவர் கோபால், செயலாளர் கரு.மாணிக்கம் உள்பட நிர்வாகிகள் குறை தீர்ப்பு முகாமில் ஒரு மனு அளித்தனர். அதில் கூறியிருப்பதாவது:-

டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படம் தேசிய திரைப் பட வெளியீட்டு கழகம் மூலம் வெளியாகி உள்ளது. இந்த திரைப்படத்துக்கு தமிழக அரசு ரூ.10 லட்சம் நிதியும், வரி விலக்கும் அளித்துள்ளது.

இந்த நிலையில் தேனி மாவட்டத்தில், அந்த மாவட்ட கலெக்டர், டாக்டர் அம் பேத்கர் திரைப்படத்தை திரை யிட்டு பள்ளி, மர்ணவ-மாண விகள் கண்டுகளிக்கும் படி செய்துள்ளார். இது போல் கோவை மாவட்டத்திலும் அம்பேத்கார் படத்தை திரை யிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.